2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1991. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்".

5. சட்டமுன்வடிவுகள்.
(அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஈ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

1991 செப்டம்பர் 30,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

7. தனித் தீர்மானம்.

மத்திய அரசு, மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்கள் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக் கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

* **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டத்தின் 340-வது விதி சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களின் நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களை முன்னேறச் செய்வதற்கான முறைகள் பற்றிய பரிந்துரைகளைத் தர ஒரு குழுவை குடியரசுத் தலைவர் நியமிக்கலாம் என்று குறி பிடுகிறது. இவ்வதிகாரத்தின்கீழ் முதலாவது பிறபடுத்தப்பட்ட வகுப்பினர் குழு மத்திய அரசால் 29—1—1953-ல் அமைக்கப் பட்டது. முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குழு கலேல்கர் குழு என்று பொதுவாக அழைக்கப்பட்டது. திரு. காகா சாகிப்

10-50 மணி.

கலேல்கர் தலைமையில் அமைந்த இக்குழுவின் உறுப்பினர் களிடையே ஒன்றுபட்ட மனப்போக்கும், ஏகமனதான கருத்துக் களும் ஏற்படவில்லை. எனவே, இக்குழுவின் அடிப்படை பரிந் துரைகளில் மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குழுவின் தலைவர் காகா சாகிப் கலேல்கரே தனது கடிதத்தில் மிகவும் மாறு பட்ட கருத்தைத் தெரிவித்தார். அதாவது, சாதி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைப் பிரிப்பதை தாம் எதிர்ப்பதாக வும், குழு அறிக்கைகளில் தரப்பட்டுள்ள பல பரிந்துரைகளில் தமக்கு வேறுபாடு இருப்பதாகவும் குறிப்பிட்டார். இக்குழுவின் அறிக்கை 30—3—1955 அன்று குடியரசுத் தலைவரிடம் சமர்ப் பிக்கப்பட்டு, அது 3—9—1956 அன்று நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது.